# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

# <u>MCOP. No.1000/2016</u>

2026–ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 19–ஆம் நாள் வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய XW.**1 வது** நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு–1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கோமதி | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது ஸ்ரீரங்கம் வட்டார போக்குவரத்து அலுவகத்தில் தட்டச்சராக பணிபுரிகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிப்பதற்கு வட்டார போக்குவரத்து அலுவலர் எனக்கு வழங்கிய அதிகார கடிதம் சா.சா.ஆ.1, நீதிமன்ற அழைப்பாணை பேரில் AP29 U4879 என்ற வாகனத்திற்கு உரிய மோட்டார்வாகனஆய்வாளர்அறிக்கை நகல் கொண்டுவந்துள்ளேன். அது சா.சா.ஆ.2, வாகன ஆய்வின் போது அபாராதம் செலுத்தியுள்ளார்களா என்றால் Compounding Amount என்ற தலைப்பில் ரூ.4000/– செலுத்தியுள்ளார்கள். அது அபாராதம் என்று உறுதியாக கூறமுடியாது. அதற்கான சான்றாவணம் சா.சா.ஆ.3, ஏதாவது விதிமீறல் இருந்தால் வழக்கு போடாமல் மேற்படி Compounding Amount என்ற தலைப்பில் தொகை வசூலிப்பது உண்டு.

**<u>மனுதாரர்கள் தரப்பு குறுக்குவிசாரணை</u>:**

சா.சா.ஆ.2 ஆணவத்தில் விபத்து தேதி 29.01.2016 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சமயபுரம் காவல்நிலைய குற்றஎண்.47/2016 குற்ற வழக்கு சம்மந்தமாக ஆய்வறிக்கை வழங்கப்பட்டுள்ளது. விபத்து தேதியில் AP29 U4879 வாகனத்திற்கு பதிவுசான்று, காப்பீடு, தகுதிசான்று மற்றும் வாகனத்தின்

ஓட்டுநரின் ஓட்டுநர்உரிமம் நடைமுறையில் இருந்தது என்றால் சரிதான். சா.சா.ஆ.2ல் சாலை விதிமீறல் இருப்பதாக குற்றவழக்கில் மோட்டார்வாகன ஆய்வாளர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 03.02.2016ம் தேதி வாகனத்தை ஆய்வு செய்ததாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 03.02.2016ம் தேதி வாகனத்தை விதிமீறல் காரணமாக பறிமுதல் செய்ததாக அதில் குறிப்பு ஏதும் இல்லை என்றால் சரிதான். சா.சா.ஆ.3 08.02.2016தேதியில் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சா.சா.ஆ.3 சமயபுரம் காவல்நிலைய குற்ற வழக்கு சம்மந்தமாக வழங்கப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது.

**<u>மறுவிசாரணை:</u>**

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.